# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,126 — 1920 ம் ௵ புரட்டாதி ௴ 3 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புத்தளம் றெயில்வே என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,891. குறிச்சி—கிரியன்களி.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தரவையும் கோயில் காடும் | பறட்டைநிலமும் சிறுகாடும் .. | முடி .. | 14 | 2 | 31·3 |
| | | குறிச்சி—முந்தல். | | | | |
| 2 | தரவையும் கரத்தன் வில்லுக்காடும் | பறட்டைநிலமும் சிறுகாடும் .. | முடி .. | 1 | 0 | 30·6 |
| 3 | கரத்தன்வில்லுக்காடு .. | சிறுகாடு .. .. | என். ஞேமானிஸ் பர்னாந்து | 0 | 2 | 9·9 |
| 4 | கரத்தல்வில்லுவத்தை | 10 துவங்கி 20 வயதுள்ள 117 தென்னைகளும், 5 துவங்கி 10 வயதுள்ள 7 தென்னைகளும், ஒரு ஓலைவீடும் ஒரு வீட்டின் பகுதிகளும், ஒரு ஓலைக்குடிலுமுள்ள தோட்டம் | எம். ஞேமானிஸ் பர்னாந்து | 1 | 2 | 9·1 |
| 5 | ஷை .. | 15 வயதுள்ள ஒரு தென்னையும், 5 துவங்கி 10 வயதுள்ள 12 தென்னைகளும், 1 வயதுள்ள ஒரு பிள்ளையுமுள்ள தென்னந்தோட்டம் | முடி. எம். ஞேமானிஸ் பர்னாந்துவால் அபகரிக்கப்பட்டது | 0 | 0 | 29·1 |
| 6 | வாய்க்கால் .. | வாய்க்கால் .. .. | முடி .. .. | 0 | 0 | 2·4 |
| 7 | தெருவும் வாய்க்காலும் | தெருவும் வாய்க்காலும் .. | கே. சின்னத்தம்பியும் மற்றவர்களும் | 0 | 0 | 11·2 |
| 8 | கரத்தன்வில்லுவயல் .. | வயல் .. .. | ஷை .. | 2 | 1 | 13 |
| 9 | ஷை .. | வயல் .. .. | ஷை .. | 0 | 1 | 14·7 |
| 10 | கரத்தன்வில்லுக்காடு .. | பறட்டைநிலம் .. .. | முடி .. | 0 | 1 | 5·5 |
| 11 | கரத்தன்வில்லுத்தோட்டம் | 10 துவங்கி 40 வயதுள்ள 48 தென்னைகளுள்ள தோட்டம் | கே. சின்னத்தம்பியும் மற்றவர்களும் | 0 | 2 | 35·5 |
| 12 | முந்தல்தோட்டம் .. | 30 வயதுக்கு மேற்பட்ட 33 தென்னைகளும், 3 வயதுள்ள ஒரு பிள்ளையும், ஒரு ஓலைவீடுமுள்ள தோட்டம் | பெரிய வைரதியும் மற்றவர்களும் | 0 | 1 | 36·4 |
| 13 | ஷை .. | 30 வயதுக்கு மேற்பட்ட 34 தென்னைகளுள்ள தோட்டம் | மார்சலின் குரேரா .. | 0 | 2 | 9·6 |
| 14 | ஷை .. | 30 வயதுக்கு மேற்பட்ட 147 தென்னைகளுள்ள தோட்டம் | ஏ. கஸ்பார் பர்னாந்து .. | 2 | 0 | 37 |
| 15 | ஷை .. | 30 வயதுக்கு மேற்பட்ட 163 தென்னைகளுள்ள தோட்டம் | பேதுரு சந்தியக்கோ மென்டிஸ், சொக்கீனு மென்டிஸ் | 2 | 0 | 26·2 |
| 16 | ஷை .. | 30 வயதுக்கு மேற்பட்ட 242 தென்னைகளும் ஒரு ஓலைவீடுமுள்ள தோட்டம் | பீ. லட்சுமணன்செட்டி .. | 3 | 0 | 30·5 |
| 17 | ஷை .. | 25 வயதுள்ள 25 தென்னைகளுள்ள தோட்டம் | பேதுரு அன்னமரியாவும் மற்றவர்களும் | 1 | 0 | 29·9 |
| 18 | முந்தல்தோட்டம் .. | 20 வயதுள்ள 2 தென்னைகளுள்ள தோட்டம் | முடி சீ. சுவன் லிவராவால் அபகரிக்கப்பட்டது | 0 | 0 | 3·4 |
| 19 | ஷை .. | 25 வயதுள்ள 16 தென்னைகளுள்ள தோட்டம் | சி. சுவன்லிவரா .. | 0 | 0 | 33·9 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 20 | தெரு .. | தெரு .. .. | முடி .. .. | 0 | 0 | 2·9 |
| 21 | முந்தல்தோட்டம் .. | 25 வயதுள்ள 2 தென்னைகளுள்ள தோட்டம் | சி. சுவன்லிவரா .. | 0 | 0 | 1·8 |
| 22 | ஷை .. | 20 வயது துவங்கி 40 வயதுள்ள தென்னைகளுள்ள தோட்டம் | நல்லமுத்து முத்துலிங்கம் ... | 0 | 1 | 23·5 |
| 23 | ஷை .. | 30 வயதுள்ள 40 தென்னைகளுள்ள தோட்டம் | எஸ். கறுப்பை, சந்தியாக்கு மென்டிஸ் வெறு ஆட்களும் | 0 | 2 | 13·5 |
| 24 | ஷை .. | 30 வயதுள்ள 62 தென்னைகளும், 3 வயதுள்ள 15 பிள்ளைகளுமுள்ளதோட்டம் | பேதுரு லொரென்ஸ் பர்நாந்துவும் மற்றவர்களும் | 1 | 3 | 35·7 |
| 25 | வளி .. | பாளவிட்டவளி .. .. | முடி .. .. | 0 | 0 | 1·3 |
| 26 | கோயில்காணி .. | பறட்டைநிலம் .. .. | கதிரேசன்கோயில் .. | 0 | 0 | 2·4 |
| 27 | தாண்டிவில்லுவயல் .. | நெற்தரை .. .. | எம். கே. ஏ. முகம்மதுதம்பி | 1 | 0 | 21 |
| 28 | தாண்டிவில்லுத்தோட்டம் | 30 வயதுள்ள 46 தென்னைகளும், 3 துவங்கி 7 வயதுள்ள 40 பிள்ளைகளுமுள்ள தோட்டம் | ஷை .. | 1 | 0 | 37·6 |
| 29 | ஷை .. | மரங்களில்லாத தென்னந்தோட்டத்தின் துண்டு | டீ. எல். விக்கிரமசிங்க .. | 0 | 2 | 38·5 |
| 30 | ஷை .. | 3 வயதுள்ள 10 தென்னம்பிள்ளைகளுள்ள தோட்டம் | வென்னடிக்கெ அந்தோனியாவும் மற்றவர்களும் .. | 0 | 2 | 20·5 |
| 31 | தாண்டிவில்லு கொக்கதிப்பன்வில்லு | பறட்டைநிலம் .. .. | முடி .. .. | 0 | 3 | 4·6 |
| 32 | தாண்டிவில்லுத்தோட்டம் | 3 வயதுள்ள 2 தென்னம்பிள்ளைகளுள்ள தோட்டம் | முடி, டீ. எல். விக்கிரமசிங்கவால் அபகரிக்கப்பட்டது | 0 | 0 | 1·2 |
| 33 | ஷை .. | 3 வயதுள்ள 9 தென்னம்பிள்ளைகளுள்ள தோட்டம் | டீ. எல். விக்கிரமசிங்க .. | 0 | 0 | 37·3 |
| | | குறிச்சி—கதியாக்களி. | | | | |
| 34 | கதிஆக்களித்தோட்டம் | 10 துவங்கி 15 வயதுள்ள 21 தென்னைகளும், 5 வயதுள்ள 43 பிள்ளைகளும், ஒரு ஓலைக் குடிஅமுள்ள தோட்டம் | எம். ஞுமானிஸ் பர்நாந்து .. | 1 | 0 | 18·3 |
| 35 | தரவை .. | பறட்டைநிலம் .. .. | முடி .. .. | 0 | 1 | 22·3 |
| 36 | ஷை .. | ஷை .. .. | முடி .. .. | 4 | 1 | 22·1 |
| 37 | செகேஸ்தா எஸ்றேற் .. | 25 வயதுள்ள 160 தென்னைகளும், 3 வயதுள்ள 84 பிள்ளைகளுமுள்ள தோட்டம் | பீ. பீ. யும் சீ. ஏ. சேற்றனும் | 3 | 2 | 22·3 |
| | | குறிச்சி—சந்தியாக்களி. | | | | |
| 38 | சந்தியாக்களி எஸ்றேற் | 30 வயதுள்ள 175 தென்னைகளும், 3 வயதுள்ள 20 பிள்ளைகளும், ஒரு ஓலையால் மேய்ந்து சுவருள்ள குடிசையும், ஒரு ஓலைக் குடிஅமுள்ள தோட்டம் | எம். எஸ். ஞுக்லூட் .. | 2 | 3 | 37·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ௦ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புககொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிறார் என்பதை 7 ௦ பிரிவின்படி டேவண்டிய பிரகாரம் நான் இதனைககொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ௵ புரட்டாதி மாசம் 27 ௳ தேதியிலன்று 10 மணிக்கு வத்துளுவை றெஸ்ற்ஹவுஸ்சில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1920 ௵ ஆவணி௴ 26 ௳.

டபிள்யு. கே. எச். கெம்பல்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ௦ இலக்கச் சட்டத்தினது 7 ௦ பிரிவின் பிரகாரம் கக்குஸ்சிக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இலக்கம் 4,919. குறிச்சி—சலாபம் டவுன். | | | | |
| 1 | கோன்கஹமுள காணி .. | வென் காணி .. | ஏ. ஜேமிஸ்பறநாந்து .. | 0 | 0 | 0·15 |
| | | பிரதமபடம் நிம்பர் 4,920. குறிச்சி—சலாபம் டவுன். | | | | |
| 1 | பிட்டிபனேறேட் காணி .. | வென் காணி .. | மிஹிதுகுனசூரிய கிருஸ்தின பீந்தோ | 0 | 0 | 0·15 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0.03 |
| | | பிரதமபடம் நிம்பர் 4,921. குறிச்சி—சலாபம் டவுன். | | | | |
| 1 | இரண்டாம் குருக்கதிருவு காணி .. | வென் காணி .. | இராமசாமி முதலியார் .. | 0 | 0 | 0·13 |
| 2 | ஷை ... | ஷை .. | அரசாட்சி, ராமசாமி முதலியார் உரித்துபேசிய | 0 | 0 | 0·08 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ௦ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ௦ பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ௵ புரட்டாதி மாசம் 29 ௳ தேதியிலன்று பகல் 10 மணிக்கு சலாபம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1920 ௵ ஆவணி௴ 27 ௳.

எஸ். எம். பீ. வேன்டர்கோன்,
அரசாட்சி உப ஏசண்டுக்காக.

## உரிமைபெறும பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,592, மாத்தளை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1920 ம் ஹு (செப்ரம்பர்) புரட்டாசிமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆச்சிபோல்ற் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில்முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகதர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனசிற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆச்சிபோல்ற்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

மத்திய மாகாணங் மாத்தளை டிஸ்திறிக் மாத்தளை வடக்குப் பிரிவு யுடுகொடப்பல்லேசியப்பத்து வெலெகெதரக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைகப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—இலங்கையளவைப் பிரதமபடம் 67.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | குள்க்கட்டின்பகுதி | 0 | 0 | 31 |
| 3 | அடிப்பாதை | 0 | 0 | 5 |
| 5 | குளக்கட்டின்பகுதி | 0 | 0 | 11 |
| | | 0 | 1 | 7 |

எல்லைகளாவன: வடக்கு-அனுத்கமக் கிராம எல்லை; கிழக்கு-வெலகொடிகெதறவத்தை (கிராமத்தாருக்குரியது), அனுத்கமக் கிராம எல்லை, வெலகெதவத்தை (கிராமத்தாருக்குரியது; தெற்கு-எலவின்பகுதி); மேற்கு-நிறியங்கொமுவாக் கிராம வெல்லை, குளக்கட்டின்பகுதி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1286 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[மாத்தளை வி. உ. 2—1920.]

---

[அறிவித்தல் இல. 7,593, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுககுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1920 ம் ஹு (செப்டம்பர்) புரட்டாதிமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். சி. ரொலர் அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிகுரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். சி. ரொலர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேன் மாகாணங் குருநாக்கல் டிஸ்றிக் டேவமெடி காத்பத்து கிறத்தலானே கோறளை உடகமக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைகப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இலங்கை யளவைப் பிரதமபடம் 1,721.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | முதியான்சேகும்புறயேன | 4 | 1 | 4 |
| 12 | கோம்பகாமுலயேனவும் டியுல்காமுலகொற்றுவ | 3 | 0 | 8 |
| 13 | உடகமவெவ (குளமுங் கட்டும்) | 8 | 2 | 10 |
| 14 | முதியான்கேம்புறயேன (குளக்கட்டுச்சேமிப்பு) | 0 | 1 | 7 |
| 15 | ரோட்டு | 0 | 0 | 11 |
| 16 | முதியான்சேகும்புறயேன | 0 | 2 | 38 |
| | | 16 | 3 | 38 |

எல்லைகளாவன: வடக்கு-பல்லேகமக் கிராம வெல்லை. சமரப்புலிகேனயலாகே கிரிப்பயவும் மறுபேரு முரித்தாடும் முதியான்சேகும்புறயேன, தென்னக்கோன்முதியான்சிலாகே பண்டார மெனிக்காவும் மறுபேரு முரித்தாடும் அம்பகாகும்புற, சேனுயக முதியான்சிலாகே முதலிகாமியும் மறுபேரு முரித்தாடும் கொங்காமுலவத்த; கிழக்கு-கறுணையக முதியான்சிலாகே பண்டாவும் மறுபேரு முரித்தாடும் கோம்பகாமுலவத்த, முடியால் விற்கப்பட்ட டியுல்காமுலவத்த (336,905 ம் உ. ப. ல் காணுங் காணி), முனிகிரிகாமக் கிராம வெல்லை; தெற்கு-முனிகிரிகமக் கிராம வெல்லை; மேற்கு-சில்வத்கமக் கிராம வெல்லை, பல்லேகமக் கிராம வெல்லை.

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 1,721.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 3 | கெலம்பகாமுலகேன்யாய | 22 | 0 | 6 |
| 4 | ஷை (குளக்கட்டுச்சேமிப்பு) | 0 | 0 | 11 |
| 5 | இஸ்வெற்றியாவெவ (குளமுங் கட்டும்) | 1 | 3 | 18 |
| 9 | சியம்பலகாமுலயேன | 1 | 2 | 16 |
| | | 25 | 2 | 11 |

எல்லைகளாவன: வடக்கு-பல்லேகம, திவுள்வெவக் கிராமங்களி னெல்லை; கிழக்கு-திவுள்வெவ, கெலியாவக் கிராமங்களி னெல்லை; தெற்கு-கெலியாவக கிராமவெல்லை, முனிகிரிகாமக் கிராம வெல்லை, முடியால் விற்கப்பட்ட டியுல்காமுலவத்த (336,905 ம் உ. ப. ல் காணுங் காணி), முடியால் விற்கப்பட்ட கோம்பகாமுலகொறற்றுவ (338,208 ம் உ. ப. ல் காணுங் காணி); மேற்கு-கறுணையக முதியான்சிலாகே பண்டாவும் மறுபேரு முரித்தாடும் கோம்பகாமுலவத்த, ஙிங்காகேனயலாகே சித்தவிதானே கேனயவும் மறுபேரு முரித்தாடும் கப்பன்கமுஅகாறே, ஜே. ஜி. தென்னகோன், றட்டமகாத்மயாவு மின்னுமொருவரு முரித்தாடும் மீகாகும்புற, பல்லேகமக் கிராம வெல்லை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1286—1287 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 45—1920.]

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1920 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ந் தேதி துவங்கி 1921 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் தேதி வரைக்கும் மீனுணர்த்துங் காலங்களில் புத்தளம் உப்புக் குதங்களிலிருந்து உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொண்டுபோய் உடப்பு குதத்தில் நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களால் 1920 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் திகதி பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரன் இதன் பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் :—

(*a*) கேள்விக்காறன் 1920 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் திகதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் 20 (இருபது) கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினுல் இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(*b*) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த வருமான விசாரணைத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காறன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(*c*) கொந்திஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

(*d*) புத்தளத்திலிருந்து 280 அந்தர் உப்பு ஏற்றி உடப்புக்குப் போகும் ஒவ்வொரு வள்ளத்துக்கும் என்ன கூலியென்று கேள்விக்காறர் காட்டி யிருக்க வேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளப்பரங்களை உப்புத்துரை யவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

எஸ். எம். பி. வெந்தர்கோன்,
உதவி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1920 ம் ஞு ஆவணிமீ 27 ந் உ.

---

புத்தளம் வட உப்புமாலினுள்ள 27 ம் உப்புக்குதத்தை பழுதுபார்க்கும் வேலை யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக்கேட்க விரும்புபவர் தம் கேள்விப்பத்திரத்தை யோர் முத்திரித்த வுறையிலிட்டு அதனிடது மூலையில் "புத்தளம் உப்புமாலினுள்ள 27 ம் உப்புக் குதத்தை பழுதுபார்க்கும் ஒப்பந்தக்கேள்வி" யென்றெழுதி புத்தளமுதவி யேசண்டவர்கட்கு 1920 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. மேற்படி கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி கேள்விக்காரன் எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டணைக்கவேண்டும்.

4. கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்திற்முன் வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதாய் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்ட பின் ஞாயமான காலத்துள் உதவி யேசன்றவர்களுடன் கேள்விக்காரன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வேண்டும். அப்படி யுடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினுல் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காரன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்க வேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின்பின் நாலு கிழமைக்குள் வேலையைக் கிரமமாக முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்.

சொல்லிய குதங்களிற் தற்போது உழுத்தும் பழுதாயும் போயிருக்கும் மரந்தடி கிடுகு முதலியவற்றை யெடுத்துப் போட்டு புதிய மரந்தடி கிடுகு முதலியவற்றைப் போடவேண்டும்.

குதத்தைப் புதுக் கிடுகினுல் வேய்ந்து கூரைக்கு மேற்பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

குதத்தின் செத்தைகளைப் புதுக் கிடுகினுல் அவசியமான இடங்களைப் பழுதுபார்க்கவேண்டும். செத்தைகளில் வெளியாயிருக்கு மிடங்களை நேராக்கிப் பழுதுபார்க்கவேண்டும்.

குதங்களின் உள்நிலத்திற்கு வேண்டிய விடங்களில் மண் போட்டுயர்த்தி யிறுக்கி மட்டமாக்கவேண்டும்.

குதங்களின் உட்புறத்திற்குப் புதுக் கிடுகினுல் வரிச்சுப் பிடிக்கவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளம் கச்சேரி,
1920 ம் ஆண்டு ஆவணிமீ 27 ந உ.

---

## காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

இத்தால் அறிவிப்பது யாதெனில் இனிமேல் ஊவாமாகாணத்தில் முடிக்குரிய காணி வத்தைக்கு அல்லது விலைக்கு தரும்படி கேள்விப்பத்திரங்களிற் குறித்த அளவை பிரிவுக்கு ஏற்றவண்ணம் எடுக்கப்படும்.

2. மாகாணம் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது :—

முதற்பிரிவு.—விந்தனை, வியலுவப்பிரிவுகளையும், யற்றிக்கிண்ட பிரிவுக்குச்சேர்ந்த பசறை, றிலபோல, போகொடைக் கோறளையும், உடுக்கின்டபிரிவின் தெகிவின்ன பலாத்தையையும், கம்பக யற்றிப்பலாத்தை, உடப்பலாத்தை, மெடபலாத்தை கோறளையும் அடக்கியுள்ளது.

இரண்டாம்பிரிவு.—உடுக்கின்றபிரிவின் டம்பவின்னைப் பலாத்தை மகாப்பலாத்தைக் கோறளைகளையும், யற்றிக்கின்றபிரிவின் கும்பல்வெலைக் கோறளையையும் வெள்ளாசைப்பிரிவின் மகாவெதிறட்டக் கோறளையும் புத்தலை வெள்ளவாய பிரிவுகளையும் அடக்கியுள்ளது.

மூன்றும்பிரிவு.—வெள்ளாசைபிரிவின் வேகம் மெதகம் பத்துக்களையும், நிலகலகிக்க வெற்றிதம்பகவ்லைக் கோறளைகளையும் யற்றிக்கிண்டபிரிவின் பட்டிபோல கோறளையையும் அடக்கியுள்ளது.

3. மேற்காட்டிய மூண்டாம் முதலாம் பிரிவைச்சேர்ந்த கேள்விப்பத்திரம் 1920 ம் ஞு அற்பசி யாசம் 1 ந் திகதிக்குப்பின் ஏற்கப்படமாட்டா. அத்திகதிக்குப்பின் இப்பிரிவுகளுக்குள் அளவைகுறித்த கேள்விப்பத்திரங்கள் உலாந்தாமேத்தர் தலைவருக்கு அனுப்பப்படமாட்டா. இந்த நிலங்கள் மறுபடி குடிப்பதற்கு ஏற்பன பண்ணமுந்தி இது கேள்விக்காரர்கள் இப்பிரிவுகளுள் உள்ள நிலத்தை வத்தைக்கு அல்லது விலைக்கு கொடுப்பதற்கு தடைகளிருக்கின்றவோ என்று அறியும் நோக்கமாய்த் தங்களுடைய கேள்விகளைப் பதிவுசெய்யும்படி கேட்பதை தடுக்கமாட்டாது.

4. இதன்பின் இரண்டாம் பிரிவினதும்; அதை பின்பற்றிவரும் மூன்றும் முதலாம் அளவைமுறையே முடியும். இப்பிரிவுகளினுள்ள முடிக்குரிய நிலத்தை வேண்டுவதற்கு அல்லது வத்தைக்கு கேள்விக்கடதாசிகள் கூடியளவு கெதியாய் எனக்கு அனுப்பபடவேண்டும்.

5. இரண்டாம் பிரிவைச்சேர்ந்த அளவை முடியும் திகதி கெதியில் பிரசித்தமாகும். அத்திகதி மூன்றும் முதலாம் பிரிவுகளினுள்ள வேலை முற்ருய் முடிந்ததென்பதற்குச் சாற்றுகும்.

வதுளைக் கச்சேரி,
1920 ம் ஆண்டு ஆவணி மாதம் 26 ந் திகதி.

ஆர். என். தேன்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசன்று.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.